செ.வெ.எண்: 16 நாள்: 7.1.2018

**புதுக்கோட்டை மாவட்டம்**

**சித்தன்னவாசல் சுற்றுலா மையத்தில் பொங்கல் சுற்றுலா கலைவிழாவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்.**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவால் ஊராட்சி ஒன்றியம், சித்தன்னவாசல் சுற்றுலா மையத்தில் சுற்றுலாத்துறையின் சார்பில் பொங்கல் சுற்றுலா கலைவிழா – 2018 மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (7.1.2018) நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பொங்கல் சுற்றுலா கலைவிழாவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார். இந்ந நிகழ்ச்சியில் சுற்றுலா பயணிகள் முன்னிலையில் சர்க்கரைப்பொங்கல் வைத்து, கரும்பு, மஞ்சள் சகிதமாக பொங்கல் சுற்றுலா விழா கொண்டாடப்பட்டது. மேலும் சுற்றுலா பொங்கல் கலைவிழாவினையொட்டி, சென்னை மீனாட்சிபிரியா ராகவன் குழுவினரின் பரதநாட்டியம் நிகழ்ச்சியும், கரூர் சின்னத்துரை குழுவினரின் கரகாட்டம், காவடியாட்டம் மற்றும் கோலாட்டம் நிகழ்ச்சியும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாட்டை சுற்றுலாத்துறையில் முன்னணி மாநிலமாக மாற்றும் வகையில் பல்வேறு நாடுகள், பல்வேறு மாநிலங்களிலிருந்தும் சுற்றுலா பயணிகள் வருகைதரும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். இதன் காரணமாக இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு முக்கிய மாநிலமாக விளங்குகின்றது. புதுக்கோட்டை மாவட்ட முக்கிய சுற்றுலா தலமான சித்தன்னவாசலுக்கு சுற்றுலா பயணிகள் எளிதில் வரும் வகையில் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து சித்தன்னவாசலுக்கு சாலை மேம்பாட்டு பணி மேற்கொள்ள அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

தமிழக அரசு பொதுமக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் சட்ட அனுமதி பெற்று ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியானது தற்போது நடைபெற்று வருகின்றது. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை பொறுத்தவரை தமிழ்நாட்டிலேயே புதுக்கோட்டை மாவட்டத்தில்தான் அதிக அளவில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த 2018 ஆம் ஆண்டின் தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியானது புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் தான் நடத்தப்பட்டது. இந்த ஆண்டு நடத்தப்படும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை காண

தமிழ்நாடு முழுவதும் இருந்து பல்லாயிரக்கணக்கான ஆர்வலர்களும், சுற்றுலா பயணிகளும் வருகைதர உள்ளார்கள். இதன்காரணமாக புதுக்கோட்டை மாவட்டமானது வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் மனம் கவர்ந்த சுற்றுலா பகுதியாக உருவாகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம் கோட்டை மற்றும் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கோவில்கள் ஏற்கனவே சுற்றுலா பயணிகளின் மனம் கவர்ந்த சுற்றுலா தலங்களாக விளங்குகின்றன.

இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஜெ.கே.ரித்திஷ், வருவாய் கோட்டாட்சியர்(பொ) திரு.செல்லப்பா, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், சுற்றுலா அலுவலர் திரு.க.இளங்கோவன், வட்டாட்சியர் திரு.சோனை.கருப்பையா உள்பட அரசு அலுவலர்கள், சுற்றுலா பயணிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை மாவட்டம்.